DEPOSITION OF WITNESS

(Chapter XXV BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI

ST.C.No. 397/2022 P.W. 1 **சுதந்திரதாசன் த/பெ. வேதையன்**

**நாள்** 26.11.2025

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாககல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

எதிரியிடம் நான் எந்த தேதியில் எங்கு வைத்து வழக்கு காசோலையை வாங்கினேன் என்றால் திருச்சியில் உள்ள எதிரியின் அலுவலகத்தில் வைத்து கடந்த 05.05.2022 ம் தேதியில் வாங்கினேன். மேற்படி விபரத்தை நான் எனது ஆணையுறுதி ஆவணம் மற்றும் வழக்கு ஆவணங்களில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. எதிரிகாசோலை கொடுத்த அடுத்தநாளே கலெக்சனுக்கு போட்டேன் என்றால் சரிதான். எதிரி என்ன வேலைபார்க்கிறார், அவருக்கு எவ்வளவு வருமான என்று என்னுடைய ஆணையுறுதி ஆவணத்தில் சொல்லவில்லை என்றால் அவருடைய கம்பெனி பெயரை சொல்லியுள்ளேன். அவருடைய வருமானத்தை பற்றி சொல்லவில்லை. எதிரிக்கு எவ்வளவு வருமான எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

18.12.2020 ம் தேதியன்று நான் ரூ.20,00,000/- எதிரிக்கு கொடுத்துள்ளதாக மனுவில் கூறியுள்ள நிலையில் அதை எவ்வாறு கொடுத்தேன் என்றால் ரொக்கமாக கொடுத்தேன். அதற்கு அன்றைய தேதியில் தான் ஆவணமாக புரோநோட்டு எழுதி வாங்கி கொண்டேன். நவம்பர் 2020 க்கு முன்னர் எனக்கும், எதிரிக்கும் ஏதாவது பணபரிவர்த்தனை இருந்ததா என்றால் இருந்தது. எந்த வங்கியில் இருந்து எந்த வங்கி பணபரிமாற்றம் நடைபெற்றது என்றால் என்னுடைய வங்கியான மன்னார்குடி ஸ்டேட் பேங்க் இருந்து எதிரியின் வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பியுள்ளேன். எதிரி என்னிடம் 1% வட்டி தருவதாக சொல்லி தான் பணம் வாங்கியதாக வழக்கு ஆவணங்களில் உள்ளது என்றால் சரிதான். 1% வட்டி என்றால் ரூ.30 லட்சத்திற்கு மாதம் எவ்வளவு வட்டி என்றால் ரூ.30,000/-. ஒரு வருடத்திற்கு ரூ.3,60,000/- வட்டி என்றால் சரிதான்.

நான் எதிரிக்கு பணத்தை கொடுத்த பிறகு எதிரி எனக்கு எத்தனை மாதங்கள் கழித்து காசோலை தந்தார் என்றால் 2 வருடம் கழித்து தந்தார். எதிரி எனக்கு இடையில் ரூ.7,00,000/- கொடுத்தது சம்பந்தமாக என்னுடைய வழக்கு ஆவணங்களில் எந்த தேதியில் கொடுத்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை. ஆனால் பணம் கொடுத்த விபரத்தை சொல்லியுள்ளேன். அதற்கு ஆவணம் என்னிடம் உள்ளது.

நான் export தொழில் செய்து வருவதாக சொல்லியுள்ள நிலையில் என்ன export தொழில் என்றால் Rice, coffee, Agro products முதலியவற்றை export செய்து வருகிறேன். export தொழில் செய்து வருவது சம்பந்தமாக எந்தவொரு license ம் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு எவ்வளவு மாத வருமானம் வருகிறது என்று வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

வெளிநாட்டிற்கு ஆட்களை அனுப்பும் தொழில் செய்துவருகிறேனா என்றால் இல்லை. எப்பவும் நான் பார்த்ததில்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், அதற்கான ஆதார ஆவணங்கள் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனக்கும், எதிரிக்கும் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக எதுவும் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டதா என்றால் இல்லை. என்னால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஆவணமான காசோலையானது இவ்வழக்கில் கண்டுள்ள காரணங்களுக்காக எதிரியால் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கும், எதிரிக்கும் வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்புவதாக வியாபார தொடர்பு இருந்த வந்தது என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் எனக்கும், எதிரிக்கும் ஒரு பண பரிவர்த்தனை பிரச்சனை இருந்தது என்றும், அதற்காக எதிரி என்னிடம் கொடுத்த காசோலையை நான் இந்த வழக்கில் மோசடியாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எனக்கும், எதிரிக்கும் வெளிநாட்டிற்கு ஆட்களை அனுப்புவது தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றும், அதில் நானே கையொப்பம் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் இந்த வழக்கில் கூறியுள்ளது போல் கடனுறுதி சீட்டு என்னிடம் இல்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் ரூ.37,00,000/- தொகை கொடுக்கும் அளவிற்கு எனக்கு வருமான தகுதி இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கே பொய்யான வழக்கு என்றால் சரியல்ல. அதனால் தான் 1% வட்டிக்கு எதிரிக்கு பணம் கொடுத்ததாக மனுவில் சொல்லியுள்ள நிலையில் 2 வருடம் கழித்து எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ரூ.7,00,000/- தவிர்த்து ரூ.30,00,000/- மட்டும் கேட்டேன் என்றும் அதற்காக எதிரி காசோலை கொடுத்தார் என்பதும் நம்பும் படியாக இல்லை என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,

Judicial Magistrate No.I,

Mannargudi.